Koviloor Digital Library



சிறுவர்களுக்கான பிரார்த்தனைகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6 47

சிறுவர்களுக்கான பிரார்த்தனைகள்

ஆங்கில மூலம்

சுவாமி ராகவேசானந்தர்

ஓவியம்

பத்மவாசன்

ACC NO: 12819

...OOR ANDAVAR ...RARY, KOVILOOR
A. No. 12819

RAMAKRISHNA MATH

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர், சென்னை 600 004

Koviloor Digital Library

முன்னுரை

ஆனந்தமாக அமைதியாக வாழ, கடவுள் நம்பிக்கையும் அவரிடம் பிரார்த்தனை செய்வதும் அவசியம். நமக்கு எது நன்மை என்பதை அவரே அறிவார். பிரார்த்தனையின் மூலம் நமக்கு வேண்டியதை நாம் பெறமுடியும்.

பிரார்த்தனை நம் மனத்தைத் தூய்மைப் படுத்துவதுடன் இறைவனின் அருகில் நம்மைக் கொண்டு சேர்க்கவும் செய்கிறது; கவலைகளையும் துன்பங்களையும் தணிப்பது மட்டுமின்றி, மனத்தை உயர்ந்த எண்ணங்களை ஏற்கும் திறமிக்கதாகச் செய்து கீழ்நிலைகளில் உழலாமலும் தடுக்கிறது.

சிறு வயது முதலே பிரார்த்தனை செய்யும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நூலில் தரப்பட்டுள்ள பிரார்த்தனைகளை குழந்தைகள் திரும்பத் திரும்பக் கூறி மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையைப் பெற இது உதவும்.

இந்நூலில் வரும் வடமொழிப் பிரார்த்தனைகளைப் பிழையின்றி உச்சரிக்கத் துணை செய்யும் விதத்தில் இத்துடன் காசெட் ஒன்றும் வெளியிடப் படுகிறது. அதனையும் உபயோகித்துப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம்.

Koviloor Digital Library

1.வேதப் பிரார்த்தனைகள்

சமய சாஸ்திரங்களில் மிகவும் தொன்மையானவை வேதங்கள். ரிக் வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்று அவை நான்காகப் பகுக்கப் பட்டுள்ளன. இந்து மதத்தின் பிற சாஸ்திரங்கள் அனைத்தும் வேதங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. வேதங்களிலுள்ள பிரார்த்தனைகள் தனியொருவரின் நன்மைக்கு மட்டுமின்றி, மனித சமுதாயம் முழுமையின் நன்மைக்காகப் பிரார்த்திக்கும் விதத்திலேயே அமைந்துள்ளன. வேதப் பிரார்த்தனைகள் போல வேறெதுவும் இவ்வளவு இதயத்தைத் தொடுவதாகவும் ஆணித்தரமாக மனத்தில் பதியத்தக்க வகையிலும் அமையவில்லை. இதற்குக் காரணம் என்ன? இந்தப் பிரார்த்தனைகள் ஒரு தனி மனிதரின் படைப்போ தொகுப்போ அல்ல; ஆழ்ந்த தியானத்தின் விளைவுகள் இவை. ரிஷிகள் ஆழ்ந்து தியானிக்கையில் இந்தப் பிரார்த்தனைகள் அவர்கள் மனக்கண் முன்னே ஒளிமிக்கத் தங்க எழுத்துக்களாகத் தோன்றின. அந்த ரிஷிகள் அவற்றைத் தங்கள் சீடர்களுக்குக் கற்பித்தனர். எனவேதான் வேதப் பிரார்த்தனைகள் இறைவன் அளித்தவையாகக் கருதப் படுகின்றன. இவற்றைச் சரியாகக் கூறிப் பிரார்த்திப்பதால் பெரு நன்மை உண்டாகும் என நம் ரிஷிகள் கூறியுள்ளனர்.

Koviloor Digital Library

ॐ भूर्भुवस्सुवः तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥ ॐ

ஓம் பூர்புவஸ்ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத் // ஓம்.

ஓம். யார் நம்முடைய புத்தியைத் தூண்டி ஒளிரச் செய்கிறாரோ அந்த மேலான சுடர்க் கடவுளின் ஒளியைத் தியானிப்போம்! ஓம்.

ॐ सहनाववतु । सहनौभुनक्तु । सहवीर्यं करवावहै ।
तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै ।
ॐ शान्तिः । शान्तिः । शान्तिः ॥

ஓம் ஸஹ நாவவது /
ஸஹ நௌ புனக்து /
ஸஹ வீர்யம் கரவாவஹை /
தேஜஸ்வினாவதீதமஸ்து மா வித்விஷாவஹை /
ஓம் சாந்தி:! சாந்தி:! சாந்தி:!

ஓம். நம் இருவரையும் (ஆசிரியர், மாணவர்) இறைவன் காப்பாராக! நம்மை அவர் வளர்ப்பாராக! நாம் இருவரும் இணைந்து பேராற்றலுடன் செயல்படுவோர்மாக! நம் கல்வி பூரணமாகவும் பலன் நிறைந்ததாகவும் அமைவதாக! நாம் ஒருவரை ஒருவர் வெறுக்காமலிருப்போமாக!

ஓம் அமைதி! அமைதி! அமைதி!

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः ।
भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।

Koviloor Digital Library

स्थिरैरङ्गैस्तुष्टुवाँ सस्तनूभिः
व्यशेम देवहितं यदायुः ॥
स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः
स्वस्ति नः पूषा विश्ववेदाः ।
स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमि :
स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥
ॐ शान्तिः । शान्तिः । शान्तिः ॥

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:
பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: /
ஸ்திரைரங்கைஸ்துஷ்டுவாம்ஸஸ்தனூபி: /
வ்யசேம தேவஹிதம் யதாயு: /
ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: /
ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: /
ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: /
ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது /
ஓம் சாந்தி:! சாந்தி:! சாந்தி:!

ஓம். தேவர்களே, எங்கள் காதுகள் நல்லதைக் கேட்கட்டும்! பூஜைக்குரியவர்களே, எங்கள் கண்கள் நல்லதைக் காணட்டும்! திடமான உடலையும் அங்கங்களையும் நாங்கள் பெறுவோமாக! தேவர்களைப் போற்றி அவர்களுக்கு நிகரான ஆயுளை அடைவோமாக! பெரும் புகழ் வாய்ந்த இந்திரன் நமக்கு நன்மை அளிக்கட்டும்! அனைத்தையும் அறியும் சூரியன் நமக்கு நன்மை செய்யட்டும்! எங்கும் தடைப்படாமல் செல்லும் கருடன் நமக்கு நன்மை அளிக்கட்டும்! பிருஹஸ்பதி நமக்கு நன்மை அருளட்டும்!

Koviloor Digital Library

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात् पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ॐ शान्तिः । शान्तिः । शान्तिः ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே /
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே //
ஓம் சாந்தி:! சாந்தி:! சாந்தி:!

ஓம். கடவுள் பரிபூரணப் பொருள், காணும் இந்த உலகமும் பூரணமானது. பூரணமான உலகம் பூரணமான இறைவனிடமிருந்தே வந்துள்ளது. அனைத்து உலகங்களும் தன்னிடமிருந்து வெளிப்பட்டும் பரிபூரணமான கடவுள் குறைவின்றி பரிபூரணராகவே இருக்கிறார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

2. விநாயகர்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

ஓம் கணேசாய நம:

விநாயகருக்குப் பல பெயர்கள் உள்ளன. அவற்றுள் கணபதி, கணேசர், பிள்ளையார், கஜானனர் போன்றவை எல்லாருக்கும் தெரிந்தவை. விநாயகர் செல்வம், அறிவு, அதிர்ஷ்டம், மங்களம், அமைதி, ஆன்மீக வெற்றி முதலியனவற்றிற்கு அதிபதி.

நம் பிரார்த்தனையால் மகிழ்ந்து நாம் மேற்கொள்ளும் பணிகளில் ஏற்படும் தடைகளை அகற்றுவதால் விக்னேசுவ்ரர் எனப்படுகிறார் அவர். வளைந்த துதிக்கையுடன் கூடிய அவரது திருவுருவம் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தைப் போலத் தோன்றுவதால் அவர் பிரணவ சுவரூபி என அழைக்கப் படுகிறார்.

விநாயகர் யானையின் தலையை உடையவர். அவர் எப்படி யானைத் தலையைப் பெற்றார் என்ற கதை நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்கு ஓர் உயர்ந்த பொருளுண்டு. சமஸ்கிருதத்தில் 'கஜ' என்னும் சொல்

Koviloor Digital Library

யானையைக் குறிக்கும். 'க' என்றால் 'கதி' அல்லது எல்லாப் படைப்புகளும் அடையப் போகும் முடிவினைக் குறிக்கும். 'ஜ' என்பது 'ஜன்மம்'' — தோற்றம் அல்லது பிறப்பு ஆகும். எனவே 'கஜ' என்னும் சொல், யாரிடமிருந்து இந்த உலகங்கள் எல்லாம் தோன்றினவோ யாரால் அவை நடத்தப் பெறுகின்றனவோ முடிவில் யாரிடம் அவை ஒடுங்க உள்ளதோ அவர், என்று பொருள்படுகிறது.

அவரது நீண்ட காதுகள் அனைவரது பிரார்த்தனைகளையும் அவர் கேட்கிறார் என்பதைக் காட்டுகிறது. விநாயகர் நீண்ட துதிக்கையை உடையவர். யானையின் துதிக்கையால் ஒரு சிறு ஊசியையும் எடுக்க முடியும், அதே வேளையில் பெரிய மரத்தையும் வேருடன் பெயர்க்க முடியும். அதாவது, சிறு செயலோ பெருஞ்செயலோ எதையும் செய்து முடிக்கின்ற அவரது வல்லமையைத் துதிக்கை காட்டுகிறது. ஏழை எளியவர் என்று யாராயினும் அவரைத் துதித்தால் அவர்களது விருப்பங்கள் நிறைவேறும். பிள்ளையாருக்கு நான்கு கைகள். அவற்றுள் ஒன்றில் பாசக் கயிறு உள்ளது. கயிறு எப்படிக் கட்டி வைக்குமோ அதுபோல உலகப் பற்றுகள் நம்மைக் கட்டி வைத்துத் துன்புறுத்தும் என்பதை இது குறிக்கிறது. மற்றொரு கையில் அங்குசம் உள்ளது. இது கோபத்தைக் குறிக்கிறது. கயிறு நம்மைப் பிணைப்பது போல அங்குசம் நம்மைக் காயப்படுத்துகிறது; கோபம் நம்மை அழித்து விடும் என்பதை இது உணர்த்துகிறது.

Koviloor Digital Library

பற்றுகளும் கோபமும் அதிகரிக்கையில் வாழ்க்கை துன்ப மயமாகிறது. இந்தத் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி, கடவுளிடம் அடைக்கலம் புகுதலாகும். கோபம் போன்ற குணங்களை எல்லாம் அவரிடம் ஒப்படைத்து விடவேண்டும். அப்போது மட்டுமே நாம் பாதுகாப்போடு இருப்போம். மூன்றாவது கையிலுள்ள மோதகம், அவர் இன்பத்தை அருள்பவர் என்பதைக் காட்டுகிறது. நாம் நமது நல்ல பண்பு மற்றும் வழிபாட்டால், அவரைத் திருப்தி செய்தால் அவர் நமக்கு இன்பத்தை அருள்வார். நான்காவது கை வரம் தருவதாகவோ ஒற்றைக் கொம்பை ஏந்தியதாகவோ உள்ளது. மனித சமுதாயம் முழுவதையும் அவர் அருள்பொழிந்து காப்பதை இது காட்டுகிறது. அவரது பெரிய வயிறு உலகங்கள் அனைத்தும் அவருள் அடக்கம் என்பதைக் காட்டுகிறது.

அவரது வாகனம் சுண்டெலி. எலி ஆசைகளைக் குறிக்கிறது. ஆசைகள் மனிதனின் எதிரிகள். ஆசை வசப்பட்ட மனிதன் அழிவது திண்ணம். பிள்ளையார் எலியின் மீது அமர்ந்திருப்பது நாம் ஆசைகளைக் கட்டுப்படுத்தி மேலான தெய்வ நிலைக்கு உயர வேண்டுமென்பதைக் காட்டுகிறது.

நாம் அனைவரும் அவரது குழந்தைகள். நாம் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருப்பதையே அவர் விரும்புகிறார்.

Koviloor Digital Library

गजवक्त्रं सुरश्रेष्ठं कर्ण-चामर-भूषितम् ।
पाशांकुशधरं देवं वन्देऽहं गणनायकम् ॥

கஜவக்த்ரம் ஸுரச்ரேஷ்டம் கர்ண சாமர பூஷிதம் /
பாசாங்குசதரம் தேவம் வந்தேஹம் கண நாயகம் //

யானைமுகம் உடையவரும் முறம் போன்ற பெரிய காதுகளை உடையவரும் பாசம், அங்குசம் தரித்திருப்பவரும் தெய்வங்களுள் சிறந்தவரும் உயிர்களின் தலைவரும் ஒளிபொருந்தியவரும் ஆகிய விநாயகரை வணங்குகிறேன்.

एकदन्तं महाकायं तप्तकाञ्चनसन्निभम् ।
लंबोदरं विशालाक्षं वन्देहं गणनायकम् ॥

ஏகதந்தம் மஹாகாயம் தப்தகாஞ்சன ஸன்னிபம் /
லம்போதரம் விசாலாக்ஷம் வந்தேஹம் கண நாயகம் //

ஒற்றைக் கொம்புடையவரும் பெரிய உடம்புடையவரும் பெரிய வயிறு உடையவரும் உருகிய பொன் போன்று ஒளிர்பவரும் நீண்ட கண்கள் உடையவரும் உயிர்க் கூட்டங்களின் தலைவரும் ஆகிய விநாயகரை வணங்குகிறேன்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

3. சிவபெருமான்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!

ஓம் சிவாய நம:

பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் மும்மூர்த்திகள் எனப்படுவர். பிரம்மா பிரபஞ்சத்தையும் உயிர்களையும் படைக்கிறார். விஷ்ணு அதனைக் காக்கிறார், சிவபெருமான் ஒடுக்குகிறார். இவர் அரன், முக்கண்ணன், நீலகண்டன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

மூன்று கண்களை உடையவர் சிவபெருமான். மூன்றாவது கண் புருவ மத்தியில் உள்ளது; அது ஞானக்கண். ஒரு முறை பார்வதி தேவி விளையாட்டாக அவரது இரு கண்களையும் மூட, அந்தோ! உலகமே இருளில் மூழ்கியது. துயரமான இந்த நிலையிலிருந்து உலகை மீட்க மூன்றாவது கண்ணை உருவாக்கி உலகிற்கு ஒளி வழங்கினார் சிவபெருமான். அவருடைய மூன்று கண்கள் சூரியன், சந்திரன் மற்றும் நெருப்பைக் குறிக்கிறது.

சிவபெருமானின் வாகனம் நந்தி என்னும் காளை. தர்ம வடிவான அந்தக் காளையின் நான்கு பாதங்கள்

Koviloor Digital Library

உண்மை, தூய்மை, இரக்கம், அன்பு என்னும் குணங்களைக் குறித்து நிற்கின்றன. சிவபெருமான் பனிபோன்ற வெண்ணிறமுடையவர். புலித்தோலை அவர் ஆடையாக அணிந்திருக்கிறார். புலி ஆசையைக் குறிக்கிறது. ஆசையை முற்றிலும் வென்றவர் என்பதைக் காட்டவே அதனை அவர் உடுத்தியிருக்கிறார்.

சிவபெருமான் சிறந்த யோகி, யோகியரின் தலைவர். அவரது தலையில் கங்கை உள்ளது. அறிவையும் தூய்மையையும் அது குறிக்கிறது. கழுத்தில் அணிந்துள்ள பாம்பு அவர் மரணத்தை வென்றவர் என்பதைக் காட்டுகிறது. விஷத்தை உண்டபோது கூட அவர் மரணம் அடையவில்லை. மாறாக, அந்த விஷம் அவரது தொண்டையை நீல வண்ணத்தில் அலங்கரித்தது. அதனால்தான் அவர் நீலகண்டர் என்ற பெயர் பெற்றார். அவரது கையில் திரிசூலம் உள்ளது. அது அவர் பிரபஞ்சத்தின் தலைவர் என்று காட்டுகிறது. மற்றொரு கையில் உடுக்கு உள்ளது. உடுக்கு ஒலி இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கே காரணமாக அமைந்தது.

वन्दे शंभुं उमापतिं सुरगुरुं
वन्दे जगत्कारणं
वन्दे पन्नगभूषणं मृगधरं
वन्दे पशूनां पतिं ।
वन्दे सूर्यशशांक वह्निनयनं
वन्दे मुकुन्दप्रियं

Koviloor Digital Library

वन्दे भक्तजनाश्रयं च वरदं
वन्दे शिवं शंकरम् ।।

வந்தே சம்பும் உமாபதிம் ஸுரகுரும்
வந்தே ஜகத்காரணம்
வந்தே பன்னக பூஷணம் ம்ருகதரம்
வந்தே பசூனாம் பதிம் /
வந்தே ஸூர்யசசாங்க வஹ்னிநயனம்
வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்தஜனாச்ரயம் ச வரதம்
வந்தே சிவம் சங்கரம் //

தேவர்களுக்குத் தலைவரும் உலகிற்கெல்லாம் காரணமானவரும் பாம்பை அணிந்தவரும் மானை ஏந்தியவரும் உயிர்களின் தலைவரும் சூரியன், சந்திரன், அக்னி, என்னும் மூன்று கண்களை உடையவரும் விஷ்ணுவுக்கு அன்பரும் பக்தர்களுக்கு அடைக்கலமானவரும் அருள் பொழிபவரும் மங்களத்தை நல்குபவரும் உமாபதியும் ஆன சங்கரரை வணங்குகிறேன்.

अशनं गरलं फणी कलापो
वसनं चर्म च वाहनं महोक्षः ।
मम दास्यासि किं किमस्ति शंभो
तव पादाम्बुज भक्तिमेव देहि ।।

அசனம் கரலம் பணீகலாபோ
வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ: /
மம தாஸ்யாஸி கிம் கிமஸ்தி சம்போ
தவ பாதாம்புஜ பக்திமேவ தேஹி //

Koviloor Digital Library

சிவபெருமானே! உமது உணவோ விஷம்; அணிகலனோ பாம்பு, உடையோ புலித்தோல், வாகனமோ காளை. எனக்குத் தருவதற்கென உம்மிடம் என்னதான் உள்ளது? எனவே, உமது தாமரைப் பாதங்களில் பக்தியை மட்டும் தந்தருள்வீர்!

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

4. திருமால்

அருமறை முதல்வனை ஆழி மாயனை
கருமுகில் வண்ணனை கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி வாழ்த்துவாம்!

ஓம் விஷ்ணவே நம:

காக்கும் கடவுளான மகா விஷ்ணு திருமால், பெருமாள், மாயன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். விஷ்ணு என்றால் எங்கும் வியாபித்திருப்பவர் என்று பொருள். அவர் பிரபஞ்சம் முழுதும் நிறைந்துள்ளார். அதனால்தான் கடவுள் எங்கும் உள்ளார் என்று நாம் கூறுகிறோம். அவருக்கு மற்றொரு பெயர் நாராயணன் என்பதாகும். நாராயணன் என்றால் மனிதர்களின் இதயங்களைத் தமது இருப்பிடமாகக் கொள்பவர் என்று பொருள்படுகிறது.

பகவான் விஷ்ணு நான்கு கரங்களுடையவர். அவற்றுள் சங்கு, சக்கரம், கதை, தாமரை முதலியவற்றை அவர் தாங்கியுள்ளார். அவரிடமிருந்தே நீர், நிலம், வாயு, தீ, ஆகாசம் ஆகிய ஐம்பூதங்கள் தோன்றின என்பதைச் சங்கு குறிக்கிறது. சக்கரம் பிரபஞ்ச மனத்தினைக் காட்டுகிறது; மனம் சக்கரத்தைப் போல கூர்மையானது,

Koviloor Digital Library

துரிதமாக இயங்கக்கூடியது. கதை, ஞானத்தையும் தாமரை, அவரது அருளாற்றலையும் குறிக்கிறது. நிற்கும் தோற்றத்தில், ஒரு கரம் அவருடைய பாதத்தை நோக்கியும், மற்றொன்று பக்தனை நோக்கியுமுள்ளது. பக்தன் கடவுளிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து, தஞ்சம் புகுந்தால் அவர் அவனைக் காப்பார் என்பதை இது காட்டுகிறது. அவரது வாகனம் கருடன்.

नमोस्त्वनन्ताय सहस्रमूर्तये
सहस्रपादाक्षि शिरोरुबाहवे ।
सहस्रनाम्ने पुरुषाय शाश्वते
सहस्रकोटि युगधारिणे नमः ॥

நமோஸ்த்வனந்தாய ஸஹஸ்ரமூர்த்தயே
ஸஹஸ்ரபாதாக்ஷி சிரோருபாஹவே /
ஸஹஸ்ரநாம்னே புருஷாய சாச்வதே
ஸஹஸ்ரகோடி யுகதாரிணே நம: //

ஆயிரமாயிரம் உருவங்களும் எண்ணற்ற தலைகள், கால்கள், கைகள், கண்கள் உடையவரும் பல பெயர்கள் உடையவரும் அழிவற்றவரும் எல்லையற்றவரும் கோடிக்கணக்கான யுகங்களாக நிலைபெற்றவரும் ஆகிய அந்தப் பரம்பொருளை வணங்குகிறேன்!

शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशं
विश्वाधारं गगनसदृशं मेघवर्णं शुभाङ्गम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिहृद्ध्यानगम्यं
वन्दे विष्णुं भवभयहरं सर्वलोकैकनाथम् ॥

Koviloor Digital Library

சாந்தாகாரம் புஜகசயனம் பத்மனாபம் ஸுரேசம்।
விச்வாதாரம் ககனஸத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம் ।
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகிஹ்ருத் த்யானகம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக நாதம் ॥

சாந்தவடிவினரும் பாம்பணைமேல் பள்ளி கொள்பவரும் நாபியில் தாமரை மலரை உடையவரும் தேவர்களின் தலைவரும் உலகிற்கு ஆதாரமானவரும் ஆகாயம் போல் எங்கும் நிறைந்தவரும் மேக நிறமுடையவரும் லட்சுமி தேவியின் நாயகரும் தாமரைக்கண்ணரும் யோகிகளின் இதயத்தில் தியானத்தால் அடையப்படுபவரும் பிறவித்துன்பத்தைத் துடைப்பவரும் அனைத்துலகிற்கும் ஒரு நாயகனாக உள்ளவருமான விஷ்ணுவை வணங்குகிறேன்.

Koviloor Digital Library

5. கலைமகள்

புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகம் தரித்த செங்கை விமலையை அமலைதன்னை
மொய்த்த கொந்தளக பார முகிண்முலைத் தவளமேனி
மைத்தகு கருங்கண் செவ்வாய் அணங்கினை வணங்கல் செய்வாம்!

ஓம் வாக்தேவ்யை நம:

உலகைப் படைக்கும் பிரம்மாவின் சக்தி கலைமகள். வித்யை, புத்தி, நினைவாற்றல், அறிவு மற்றும் ஞானம் ஆக அவளே உருவாகியுள்ளாள். சரஸ்வதி, சாரதா, வாக்தேவி, வீணாபாணி என்றெல்லாம் அவள் அழைக்கப்படுகிறாள். அறிவு வடிவினளாதலால் அவள் தூய வெண்ணிறத்தவளாகத் தீட்டப் பெறுகிறாள். கலைமகளின் நான்கு கரங்களுள் ஒன்றில் ஜப மாலையும், இன்னொன்றில் நூலேடும் மற்ற இரு கரங்களிலும் வீணையும் உள்ளது.

நூலேடு எல்லா அறிவையும் குறிக்கிறது. வீணை நுண்ணுணர்வுக் கலைகளைக் காட்டுகிறது. ஜபமாலை ஆன்மீகக் கலையைக் குறிக்கிறது. வெண்தாமரை மீது அமர்ந்து அருள் புரிகிறாள் கலைமகள்.

जय जय देवि चराचरसारे कुचयुगशोभित मुक्ताहारे ।
वीणापुस्तकरञ्जितहस्ते भगवति भारति देवि नमस्ते ॥

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஜய ஜய தேவி சராசரஸாரே
குசயுகசோபித முக்தாஹாரே /
வீணாபுஸ்தக ரஞ்சிதஹஸ்தே
பகவதீ பாரதீ தேவீ நமஸ்தே //

பிரபஞ்சத்தின் சாரமானவளும் முத்தாரம் தவழும் மார்பினளும் வீணையையும் நூலையும் ஏந்தியவளும் பகவதி, பாரதி போன்ற பெயர்களால் அழைக்கப் பெறுபவளுமான தேவியை வணங்குகிறேன்.

या कुन्देन्दु तुषारहार धवला या शुभ्र वस्त्रावृता
या वीणावरदण्ड मण्डितकरा या श्वेत पद्मासना ।
या ब्रह्माच्युत शंकर प्रभृतिभिर्देवैः सदा वन्दिता
सा मां पातु सरस्वती भगवती निःशेष जाड्यापहा ॥

யா குந்தேந்து துஷாரஹார தவளா
யா சுப்ர வஸ்த்ராவ்ருதா
யா வீணா வரதண்ட மண்டிதகரா
யா ச்வேத பத்மாஸனா /
யா ப்ரஹ்மாச்யுத சங்கர ப்ரப்ருதிபிர்
தேவைஸ் ஸதா வந்திதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நி: சேஷ ஜாட்யாபஹா //

தும்பைப்பூ, சந்திரன், பனி, முத்து இவை போல வெண்ணிறம் கொண்டவளும் வெண்ணிற ஆடை உடுத்தவளும் வீணையை ஏந்தியவளும் வரங்களை அளிப்பவளும் அழகிய வெண்தாமரையில்

Koviloor Digital Library

வீற்றிருப்பவளும் தேவர்களாலும் மும்மூர்த்திகளாலும் எப்போதும் ஆராதிக்கப்படுபவளும் ஆகிய கலைமகள் என் அறியாமையைப் போக்கிக் காப்பாளாக!

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

6. திருமகள்

பொன்னரசி, நாரணனார்தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனியழ குடையாள்,
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே!

ஓம் லக்ஷ்ம்யை நம:

காக்கும் கடவுளாகிய திருமாலின் தேவி திருமகள். செல்வம், அதிர்ஷ்டம், சக்தி மற்றும் அழகுக்குத் தலைவி இவள். இவள் லட்சுமி, ஸ்ரீ, அலைமகள் என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த பொழுது அதிலிருந்து தோன்றியவள் திருமகள் என்று பாகவத புராணம் கூறுகிறது. பொதுவாக, திருமகள் இரண்டு கைகளிலும் அழகிய தாமரைமலர்களை ஏந்திய வண்ணம் செந்தாமரைப் பூவில் வீற்றிருப்பவளாக உள்ளாள்.

पद्मानने पद्मविपद्मपत्रे पद्मप्रिये पद्मदलायताक्षि ।
विश्वप्रिये विष्णुमनोऽनुकूले त्वत्पादपद्मं मयि सन्निधत्स्व ॥

பத்மானனே பத்மவிபத்மபத்ரே
பத்மப்ரியே பத்மதலாயதாக்ஷி /
விச்வப்ரியே விஷ்ணுமனோனுகூலே
த்வத்பாத பத்மம் மயி ஸன்னிதத்ஸ்வ //

Koviloor Digital Library

தாமரை போன்ற முகம் கொண்டவளே! மண்ணுலக விண்ணுலக தாமரைக் கொடிகள் போன்ற மென்மையான அங்கங்கள் கொண்டவளே! அழகிய செந்தாமரையை இருப்பிடமாகக் கொண்டவளே! உலகத்தால் உவந்து வணங்கப்படுபவளே! விஷ்ணுவின் மனத்திற்கு உகந்தவளே! உன் தாமரைப் பாதங்கள் என் நெஞ்சில் நிலைக்கும்படிச் செய்வாயாக!

पद्मानने पद्मऊरु पद्माक्षि पद्मसंभवे ।
तन्मे भजसि पद्माक्षि येन सौख्यं लभाम्यहम् ॥

பத்மானனே பத்மஊரு பத்மாக்ஷி பத்மஸம்பவே /
தன்மே பஜஸி பத்மாக்ஷி யேன ஸௌக்யம் லபாம்யஹம் //

தாமரை போன்ற முகம், தாமரை போன்ற கால்கள், தாமரை போன்ற கண்கள் கொண்டு தாமரையில் தோன்றியருளும் அன்னையே, நன்மையும் செல்வமும் பெறும் பொருட்டு உன்னை நான் வணங்குகிறேன்!

नमस्तेऽस्तु महामाये श्रीपीठे सुरपूजिते ।
शंखचक्र गदाहस्ते महालक्ष्मि नमोऽस्तु ते ॥
सर्वज्ञे सर्ववरदे सर्वदुष्ट भयंकरि ।
सर्वदु:ख हरे देवि महालक्ष्मि नमोऽस्तु ते ॥

நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே /
சங்கசக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்து தே //

ஸர்வஜ்ஞே ஸர்வவரதே ஸர்வதுஷ்ட பயங்கரி /
ஸர்வதுக்க ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்து தே //.

Koviloor Digital Library

ஸ்ரீசக்கர வாசினியான திருமகளே! உலகை மயக்குபவளே, தேவர்களால் வழிபடப் பெறுபவளே, சங்கு, சக்கரம், கதை போன்ற ஆயுதங்களைத் தரித்தவளே, உனக்கு வணக்கம்!

எல்லாம் அறிந்தவளே, எல்லா வரங்களும் நல்குபவளே, தீயவர்களுக்கு மிகவும் பயங்கரமானவளே, துன்பங்கள் அனைத்தையும் ஒழிப்பவளே, மகாலட்சுமி தேவியே உனக்கு வணக்கம்!

Koviloor Digital Library

7. குரு

தந்தை தாயாவானும் சார்கதி யீங்காவானும்
அந்தமிலா இன்ப நமக்காவானும் — எந்தமது
ஊனாகுவானும் உயிராகுவானும் அருட்
கோனாகுவானும் குரு.

ஓம் குரவே நம:

'குருவில்லா வித்தை பாழ்' என்பது பழமொழி. நமது அறியாமையை அகற்றுபவர் குரு. சிவபெருமான் குருவாக அமர்ந்த கோலமே தட்சிணாமூர்த்தி. ஆலமரத்தின் கீழமர்ந்து முனிவர்களுக்கு உபதேசம் செய்கிறார் அவர். அவரது கைகளிலுள்ள நூலேடு உலகியல் கல்வியையும், ஜபமாலை ஆன்மீகக் கல்வியையும் அக்கினி ஞானத்தையும், சின்முத்திரை பரம்பொருள் தத்துவத்தையும் உணர்த்தி நிற்கிறது.

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात् परब्रह्म तस्मै श्री गुरवे नमः ॥

குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேச்வர: /
குருஸ்ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஶ்ரீ குரவே நம: //

குருவே பிரம்மா, விஷ்ணு, சிவன், அவரே பரப்பிரம்மம். அந்த குருவுக்கு நமஸ்காரம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

ब्रह्मानन्दं परमसुखदं केवलं ज्ञानमूर्तिं
द्वन्द्वातीतं गगनसदृशं तत्त्वमस्यादि लक्ष्यम् ।
एकं नित्यं विमलं अचलं सर्वधीसाक्षि भूतं
भावातीतं त्रिगुणरहितं सद्गुरुं तं नमामि ॥

ப்ரஹ்மானந்தம் பரம ஸுகதம் கேவலம் ஜ்ஞானமூர்த்திம்
த்வந்த்வாதீதம் ககனஸத்ருசம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம் /
ஏகம் நித்யம் விமலம் அசலம் ஸர்வதீஸாக்ஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும் தம் நமாமி //

எப்போதும் பிரம்மானந்தத்தில் மூழ்கியிருப்பவரும் மேலான நன்மைகளை அளிப்பவரும் பற்றற்றவரும் அறிவு வடிவினரும் இருமைநிலை கடந்தவரும் எங்கும் பரந்தவரும் 'அதுவே நீ' போன்ற வேதவாக்கியங்களால் சுட்டப் படுபவரும் ஒன்றேயானவரும் அழிவற்றவரும் குறைகளற்றவரும் அசைவற்றவரும் நம் அறிவுள் நின்று அனைத்தையும் கவனிப்பவரும் எல்லா நிலைகளையும் கடந்தவரும் முக்குணங்கள் அற்றவரும் ஆன உண்மை குருவை வணங்குகிறேன்.

Koviloor Digital Library

8. முருகன்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறுமுகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி!

ஓம் ஸுப்ரமண்யாய நம:

முருகன் தமிழ்க்கடவுள் என்று போற்றப் படுகிறார். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சூரபன்மனை அழிக்க, சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்போந்த தீப்பொறியிலிருந்து தோன்றியவர் முருகன். குமரன், குகன், சரவணன், தேவசேனாபதி, வேலவன், என்பதெல்லாம் இவரது திருநாமங்கள். ஆறுமுகங்களுடனும் பன்னிரு கரங்களுடனும் காட்சியளிக்கும் போது அறுமுகன் என்று அழைக்கப் படுகிறார். இவருக்கு வள்ளி, தெய்வானை என சக்தியர் இருவர்.

முருகனின் கையிலுள்ள வேல் ஞானவடிவம். அவரது வாகனம் மயில், அது பாம்பின் மீது நிற்பதாகச் சித்தரிக்கப் படுகிறது. பாம்பு சிற்றின்ப ஆசைகளைக் குறிக்கிறது. மயில் பிரம்மசரிய சக்தியின் அடையாளம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிரம்மசரிய சக்தியால் காமத்தை வென்று மனிதன் நிறைநிலையை அடைவதை இது காட்டுகிறது.

பொதுவாக இவரது கோவில் குன்றின் மீதோ மலைகளின் மீதோ உள்ளது.

षडाननं कुङ्कुमरक्तवर्णं महामतिं दिव्यमयूरवाहनम् ।
रुद्रस्य सूनुं सुरसैन्यनाथं गुहं सदा शरणमहं प्रपद्ये ॥

ஷடானனம் குங்கும ரக்தவர்ணம்
மஹாமதிம் திவ்ய மயூரவாஹனம் /
ருத்ரஸ்ய ஸூனும் ஸுரஸைன்ய நாதம்
குஹம் ஸதா சரணமஹம் ப்ரபத்யே //

சிவந்த நிறமுடையவரும் பேரறிவின் இருப்பிடமானவரும் அழகிய மயிலை வாகனமாகக் கொண்டவரும் சிவபெருமானின் திருக்குமாரரும் தேவசேனாபதியும் அன்பர்களின் இதயக் குகையில் உறைபவரும் ஆகிய ஆறுமுகனை எப்போதும் தஞ்சம் அடைகிறேன்.

नमो नमस्ते गुह शक्तिधाम्ने
नमो नमस्ते गुह शक्तिधर्त्रे ।
नमो नमस्ते गुह देवसेना
भर्त्रे नमस्ते कुलभूषणाय ॥

நமோ நமஸ்தே குஹ சக்திதாம்னே
நமோ நமஸ்தே குஹசக்திதர்த்ரே /
நமோ நமஸ்தே குஹ தேவஸேனா
பர்த்ரே நமஸ்தே குலபூஷணாய //

Koviloor Digital Library

ஆற்றலின் உறைவிடமானவரும் வேலை ஏந்தியவரும் தேவசேனாபதியும் குலத்திற்கு அணி போன்றவரும் ஆகிய வடிவேலனை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்!

Koviloor Digital Library

Koviloor Digital Library



Koviloor Digital Library

9. ஸ்ரீராமகிருஷ்ணர்

மறைகளின் முடிவில் நின்ற மாபெரும் உண்மையெல்லாம்
அறிவிலாச் சிறுவர் கூட அறிந்தனுபவிக்குமாறு
நறை நிகர்ச் சொற்கள் கொண்டு நயமிகு உவமைசேர்த்து
திறமுடன் உரைத்த செல்வர் ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்க!

ஓம் ராமக்ருஷ்ணாய நம:

மனித குலத்தை வழிநடத்த அவ்வப்போது கடவுள் அவதரிக்கிறார். சமீபகாலத்தில் வங்காளத்தில் தோன்றிய ஸ்ரீராமகிருஷ்ணர் மிகச் சிறந்த அவதாரமெனப் போற்றப்படுகிறார்.

கடவுளைக் காண வேண்டுமென்ற பேராவலும் தீவிர ஏக்கமும் சிறுவயதிலேயே அவரிடம் மிகுந்திருந்தது. தமது பதினாறாம் வயதில் கல்கத்தாவில் தட்சிணேசுவரத்திலுள்ள காளி கோவிலில் அவர் அர்ச்சகரானார். தனக்குக் காட்சி நல்குமாறு அவர் அன்னை காளியிடம் மனமுருகிப் பிரார்த்தித்தார்; அழுதார்; அரற்றினார். ஆண்டுகள் பல சென்றன. அவரது தீவிர மனஏக்கத்தையும் அன்பையும் கண்ட உலக அன்னை அவருக்குக் காட்சி தந்தருளினாள். பின்னர்

Koviloor Digital Library

அவரது வாழ்வு கடுமையான ஆன்மீக சாதனைகள் நிறைந்த ஒன்றாயிற்று.

அவரது ஆன்மீக சக்தியால் கவரப்பட்டு ஆண், பெண், இளைஞர், படித்தவர், பாமரர் அனைவரும் அவரிடம் வந்தனர். அனைவருக்கும் தமது இறுதி நாள் வரை உபதேசித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். தமது பணிகளைத் தொடர பல இளைஞர்களைப் பயிற்றுவித்தார் அவர். அவரது தலைமைச் சீடர் சுவாமி விவேகானந்தர். ஸ்ரீராமகிருஷ்ணரின் மறைவிற்குப் பின் அந்த இளைஞர்கள் சுவாமி விவேகானந்தரின் தலைமையில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் சங்கத்தை நிறுவி சொந்த முக்திக்காகவும் பிறர் நலத்திற்கும் பாடுபடலாயினர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அருளிய உபதேசங்கள் எளிமையானவை. ஒவ்வொருவரையும் தூய வாழ்வு வாழும்படியும் கடவுளை நோக்கிச் செல்லும்படியும் அவை ஊக்குவிக்கின்றன.

நாமும் அவரைப் பிரார்த்திப்போம்!

ॐ ह्रीं ऋतं त्वमचलो गुणजित् गुणेड्यः
नक्तं दिवं सकरुणं तव पादपद्मं ।
मोहं कषं बहुकृतं न भजे यतोऽहं
तस्मात्त्वमेव शरणं मम दीनबन्धो ॥

ஓம் ஹ்ரீம் ருதம் த்வம் அசலோ குணஜித் குணேட்ய:
நக்தம் திவம் ஸகருணம் தவ பாத பத்மம் /

Koviloor Digital Library

மோஹம் க்ஷம் பஹு க்ருதம் ந பஜே யதோஹம்
தஸ்மாத் த்வமேவ சரணம் மம தீன பந்தோ //

ஓம் ஹ்ரீம்! நீரே உண்மை, மாறாத உண்மைப்பொருள், முக்குணங்களைக் கடந்தவரெனினும் பக்தர்களுக்காக குணங்களைத் தாங்கியவர். அறியாமை இருளை அழிக்கின்ற உமது தாமரைப் பாதங்களை இரவும் பகலும் அன்புடன் வணங்கிலேன். எனவே எளியவர்க்கு இரங்கும் கருணைக் கடலே, நீர்தாம் எனது ஒரே அடைக்கலம்.

निरञ्जनं नित्यमनन्तरुपं भक्तानुकंपाद् धृतविग्रहं वै ।
ईशावतारं परमेशमीढ्यं तं रामकृष्णं शिरसा नमामि ॥

நிரஞ்ஜனம் நித்யம் அனந்த ரூபம்
பக்தானுகம்பாத் த்ருத விக்ரஹம் வை /
ஈசாவதாரம் பரமேசம் ஈட்யம்
தம் ராமக்ருஷ்ணம் சிரஸா நமாமி //

களங்கமற்றவரும் அழிவற்றவரும் எல்லையற்ற உருவம் கொண்டவரும் பக்தர்களிடம் கொண்ட கருணையால் உடலெடுத்தவரும் இறைவனின் அவதாரமும் பரமேசுவரனும் வணங்கத்தக்கவரும் ஆகிய ஸ்ரீராமகிருஷ்ணரைத் தலையால் வணங்குகிறேன்.

ॐ स्थापकाय च धर्मस्य सर्वधर्म स्वरूपिणे ।
अवतार वरिष्ठाय रामकृष्णाय ते नमः ॥

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வதர்ம ஸ்வரூபிணே /
அவதார வரிஷ்டாய ராமக்ருஷ்ணாய தே நம: //

Koviloor Digital Library

அறத்தை நிலைநாட்டியவரும் அனைத்து அறவடிவினரும் அவதாரங்களுள் தலைசிறந்தவரும் ஆகிய ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்குகிறேன்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12819

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை 600 004

© ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
உரிமைப் பதிவு பெற்றது

IV-2M 3C-2-99
ISBN 81-7120-253-5

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை 600 004